விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 26 றஜப் 22 இதழ்: 288

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8-2-1991


ஈராக் மீது குண்டுவீச்சு

## அமெ. பிரிட்டன் தளபதிகள் கருத்து முரண்பாடு

(ரியாட்)

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக போரிட்டுவரும் பன்னாட்டுப்படையிடையேபெரும் கருத்து முரண்பாடு எழுந்துள்ளது. அமெரிக்காவும்-பிரிட்டனும் பலத்த முரண்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஈராக்கின் பொருளாதார நிலைகளை தொடர்ச்சியாக தவிர்த்து படைமுகாம்களை குண்டுவீசி அழிப்பதை

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி செலுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதிக்கு பங்களிக்க விரும்பும் நல்லூர்,

(4ம் பக்கம் பார்க்க)

★ மணலாறு இராணுவ காவல் அரண்மீது

# புலிகளின் அதிரடித்தாக்குதல்;

# 7 படையினர் பலி, பலர் காயம்

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

[மணலாறு]

**மணலாறு மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் மீட்கப்பட்டது.**

நேற்றுக்காலை 7-25 மணியளவில் மணலாறு மாவட்டத்திலுள்ள சிலோன் தியேட்டர் முகாமுக்கும், முந்திரிகைக்குளம் முகாமுக்குமிடையிலுள்ள இராணுவ காவலரண் மீதுவிடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் மேற்கொண்டனர். ஐந்து நிமிடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். காயமடைந்த இராணுவத்தினர் காவலரணைவிட்டு அருகிலிருந்த முகாம்களுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

இத்தாக்குதலை அறிந்து மேற்படி இருமுகாம்களிலுமிருந்து உதவிக்கு வந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரமரணமடைந்த புலிகளின் புகழுடம்புகள் அக்கினியுடன் சங்கமமாகின

[யாழ்ப்பாணம்]

தச்சன் காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளின் புகழுடம்புகள் மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் நேற்று அக்கினியில் சங்கமமாகின.

வீரமரணமடைந்த வேங்கைகளின் புகழுடம்புகள் அலங்கரிக்கப்பட்ட ரதங்களில் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது வீதிகள் தோ

(4-ம் பக்கம் பார்க்க)

நல்லூர், இருபாலைப் பகுதிகளில்

## ஹெலியிலிருந்து கிரெனட் வீச்சு
## 6 பேர்காயம்; வீடுகள் சேதம்

(நல்லூர்)

நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி, இருபாலைமுத்திரை சந்தை ஆகிய பகுதிகளில் நேற்றிரவு 7 மணியளவில் பரவலாக நடந்த ஹெலிதாக்குதலில் 6பேர் காயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் ஹெலி தாக்குதல்

(நல்லூர்)

யாழ் நகரில் பாதுகாப்பு வலயத்தின் மேலாக வட்டமிட்டுநேற்றிரவு7மணியளவில் ஹெலிகப்டரிலிருந்து தாக்குதல் இடம்பெற்றது. (152)

★ பஸ் சேவையை ஆரம்பிக்ககோரி

## 2000 பஸ் ஊழியர்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் விமானத்தாக்குதலை நிறுத்தி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும், மாதச் சம்பளத்தை மாறும் கோரிச் நான்கு வழங்கு சுமார் இரண்டாயிரம் வடபிராந்திய போக்குவரத்துச் சபை

(4ம் பக்கம் பார்க்க)

கொடிகாமத்தில்

## பொம்மர் தாக்குதல் சிறுவன்பலி; வீடுகள்சேதம்

[யாழ்ப்பாணம்]

கொடிகாமத்தில் இருபொம்மர்கள் நேற்றுமாலை 5மணிக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## ● "அமைச்சர் சுக்ளாவின் விஜயம் அரசின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை" அமைச்சர் ரஞ்சன்

(கொழும்பு)

இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்ளாவின் இலங்கை விஜயம், அரசு தற்போது கடைப் பிடித்துவரும் கொள்கையிலோ அல்லது போக்கிலோ எந்த வகைய மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொழும்பில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் நேற்றுக் கூறினார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத் துறைஅமைச்சர் சுக்ளாவுடன் இலங்கை அரசு நடாத்திய பேச்சுவார்த்தை குறித்த கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்க முடியாதது என்றும் பாது

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தரன் ஸ்ருடியோ

நபர்சில், கலர் கறுப்பு வெள்ள படங்கள், பாஸ் போட், அடையாள அட்டை, 12''x10'' படங்கள் பிளாஸ் ரிக்போம், விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகள். 24, ஸ்ரான்லி வீதி, (ரெட்ணவீதி) யாழ்ப்பாணம். (சி-4302)

### சமூகக் கல்வி

விற்பனையாகின்றது! சமூகக் கல்வி-ஆண்டு:11 (புதியபாடத் திட்டம்) ஆக்கியோன்:- ந. தர்மபாலன். சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-4318)

### விற்பனைக்கு

அல்சேசன் நாய் [1½ வருடம்] Car [A-40 Ferina], Garage, Audio Tape recorder [Pioneer] Boxஉடன் விற்பனைக்குண்டு. No. 22, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [சி4320]


# இலங்கை அனுமதி

[கொழும்பு]

பன்னாட்டு படைகளின் போர் விமானங்களும், கப்பல்களும், கொழும்பு துறைமுகத்தில் எரிபொருள் நிரப்புவதற்கு இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

அமெரிக்க அரசு இலங்கை அரசுக்குவிடுத்திருந்த வேண்டுகோளை இலங்கை அரசு பரிசிலனை செய்ததை அடுத்து இந்த முடிவை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இதே வேளையில், வளைகுடா யுத்த முனையில் காயமடைந்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் இங்கு வரவழைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கவும் இலங்கை அரசு இணங்கியுள்ளது.


## NEW MASTER INSTITUTE

B.M.C. Lane, Jaffna.

**92 A/L**

★ விலங்கியல் ★

திரு. நாகநாதன்

★ இழையவியல்
★ தொகுதிகள்

ஆரம்பம்: 10-02-91
ஞாயிறு
காலை 8-00 மணி

(கி 1083)


## போராளிகள் இடமாற்றம்

(சென்னை)

தமிழ்நாடு அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ்ப் போராளிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள் (க)

## பாண் 9 ரூபா!

(நாவற்குழி)

சாவகச்சேரியில் பாணின் விலை 50 சதத்தால் அதிகரித்துள்ளது.

இதுவரை 8 ரூபாவாக இருந்த மொத்த விலை 8 ரூபா 50 சதமாகவும், 8 ரூபா 50 சதமாக இருந்த பாணின் சில்லறை விலை 9-00 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

(107)


## யாழ்ப்பாண மாநகர சபை

### முக்கிய அறிவித்தல்

1991ஆம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் செய்யப்படும்எந்தவொரு தொழில், வியாபாரம், தேர்த்த தொழில் சம்பந்தமாகவும் இதன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள கால தவணைக்குள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டும், கட்டணங்கள் செலுத்தியும் அனுமதி பெறப்படல் வேண்டும். குறித்த தவணைக்குள் கட்டணங்கள் செலுத்தத்தவறின் 10 வீதம் வெலியாகத்துக்கட்டணமும் சேர்த்து அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**கால அட்டவணை**

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய
இறுதித் திகதி - 28-02-1991

கட்டணங்கள் செலுத்த வேண்டிய
இறுதித் திகதி - 31-03-1991.

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 05-02-1991.

(எ-1086)



## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எங்கள் நிதிநிறுவனம் 1988-ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிநிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

LICENCE NO: NBS / R / 90 / 021

### ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியு புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4.

207, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

(எ 1077)



## YEAR 9, 10, 11

புதிய பிரிவுகள்
ஆரம்பம்
09-02-91 - SAT
8-00 A. M.

**SCIENCE ACADEMY**
NALLUR

(எ-1088)


## ஹெலி சூட்டு காயம்

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டியில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதலில் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியைச் சேர்ந்த எப்யூட் எமிலியாஸ் 47 வயது என்பவர் காயமேற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஈ)

## செங்கை ஆழியானுக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் செங்கை ஆழியான் பாராட்டுக் கூட்டம் நல்லூர் கம்பன்கோட்டத்தில் 10ம் திகதி ஞாயிறு நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இக் கூட்டத்தில் 'வரதர்', 'நந்தி', செம்பியன் செல்வன், திரு. க. டிவகலால, பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, திரு. இ. ஜெயராஜ், திரு. டொமினிக் ஜீவா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள்.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னத்தம்பி இராசம்மா

மலர்வு: 25-1-1944 உதிர்வு: 8-2-1990

திதி: 8-2-1991

அன்பின் உருவமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம்
காத்தீரே
திடீரென காலன் உம்மை அழைத்தானே
ஓராண்டு சென்றாலும் உங்கள் பொன்னான நினைவுகள்
எம்மை விட்டு பிரியாது துடிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள், உற்றார், உறவினர்.

பூதராயர் கோவிலடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(சி-4314)



## NEW SCIENCE ACADEMY

KANNATHIDY JAFFNA

### PAPER CLASSES

[துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள்]

**PHYSICS-** PAST PAPERS
திரு. சோதிலிங்கம்
ஆரம்பம்: 09-02-91 SAT. 12-00 A. M.

**ZOOLOGY-**PAST PAPERS
திரு. தம்பிராஜா
ஆரம்பம்: 09-02-91 SAT. 11-00 A. M.

**CHEMISTRY-**GENERAL & IN ORGANIC
சண்
ஆரம்பம்: 12-02-91 TUE. 11-00 A. M.

**BOTANY-**MICRO BILOGY
குணசீலன்
ஆரம்பம்: 12-02-91 TUE. 8-00 A. M.

(கி 1087)

● திருகோணமலை மாவட்டத்தில்

# திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழர் வெளியேற்றப்படும் அவலநிலை

## குடிசன மதிப்புகளோடு ஓர் ஆய்வு

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்களாகும். இலங்கை அரசினர் கிழக்கு மாகாணத்தில் முக்கியமாக திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மை இனமான சிங்களவரை குடியேற்றினார்கள். தமிழ் மக்கள் பெரும் பாதிப்புற்றனர். தமிழ்க் கிராமங்கள் சிங்களக் கிராமங்களாகின. தமிழ் மக்கள் அகதிகளாகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இனிமேல் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படவேண்டுமாகில் திட்டமிட்ட குடியேற்றங்களை மறு பரிசீலனைக்கு உள்ளாக்கவேண்டும் என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கிறது.

இலங்கையில் 1827, 1881, 1891, 1901, 1911, 1921, 1946, 1952, 1965, 1971, 1981 ஆகிய வருடங்களில் குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குடிசன மதிப்பீடுகளை ஆய்வுக்குரியதாக எடுத்தால், திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்களின் உண்மைகள் உண்மைகள் புலப்படும்.

குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1949-ல் பார்வதி கிராமமாக இருந்த தமிழ்க் கிராமத்தை 'பதவியா' என்ற பெயர் மாற்றத்தோடு 1,112 சிங்களக் குடும்பங்களும் மூதூர் அல்லைக்கிராமத்தில் 1950-ம் ஆண்டில் 744 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்டன.

1957-ம் ஆண்டில் முதலிக்குளம் என்னும் பிரதேசத்தை 'மொறவெவ' என்று பெயர் இட்டு 612 சிங்களக் குடும்பங்களும், 1960ல் அபயபுரம் என்ற சிங்களக் கிராமத்தை ஏற்படுத்தி 60 சிங்களக்குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

### மணிசேகரன்

இதே காலப்பகுதியில் பெரியகுளம் என்ற பகுதியில் நந்தனார் என்ற தமிழ்ப்பூர்வீக ஆலயத்தை, சிங்கள மக்களின் பௌத்த விகாரை என்று வர்ணிக்கப்பட்டு 112 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றினார்கள். உப்புவெளி ஸ்ரீமாபுர குடியேற்றத்திட்டம் 1966ல் பாலம்போட்டாறில் 30 குடும்பங்களும், 1971ல் மூதூர் கிளிவெட்டியில் 92 குடும்பங்களைக் குடியேற்றினார்கள்.

1974ல் 96ம் கட்டை முள்ளிப்பொத்தானையில் 72 குடும்பங்களும், குச்சவெளி புடவைக்கட்டு பகுதிகளில் 30 குடும்பங்களைக் குடியேற்றினார்கள்: இதன் பிரகாரம் 1891ல் 66 வீதமாக இருந்த தமிழ்மக்கள் 1981ல் 36 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணலாம். 1981ம் ஆண்டில் திருகோணமலைமாவட்டத்தில் 92510 தமிழர்களும், 86341 சிங்களவர்களும், 74992 முஸ்லிம்களும் இருந்ததாக புள்ளிவிபரவியலாளர்கள் கருதுகின்றனர்.

மீண்டும் 1990ம் ஆண்டு ஏற்பட்ட இனமோதலில் தமிழ் மக்கள் அகதிகளாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்திருக்கும் இவ்வேளையில் கடற்றொழில் அமைச்சின் தலைமைக்காரியாலயம் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றிருப்பதும் திட்டமிட்ட குடியேற்றத்திட்டத்துக்கான கால்கோளோவென ஐயுறவேண்டியுள்ளது!

திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் அரசியல் பிரச்சனைக்கு பெரும்முட்டுக்கட்டையான காரணியாக இருக்கிறது என்பதை யாரும் அவதானித்துக் கொள்ளலாம்; தொடர்ந்தும் இந்நிலை ஏற்படுமானால் திருமலையிலிருந்து தமிழர் வெளியேற்றப்படும் ஓர் நிலை உருவாகும் என்பது கண்கூடு. (152)

| வருடம் | தமிழர் | சிங்களவர் | முஸ்லிம் |
|---|---|---|---|
| 1891 | 66% | 04% | 25% |
| 1901 | 60% | 04% | 29% |
| 1911 | 58% | 04% | 32% |
| 1921 | 54% | 04% | 37% |
| 1946 | 44.5% | 15% | 30.6% |
| 1952 | 44% | 18% | 34% |
| 1965 | 39% | 29% | 30% |
| 1971 | 37% | 31% | 29% |
| 1981 | 36% | 34% | 28% |

1948-ம் ஆண்டுக்கு முன் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் ஐயாயிரத்துக்குள் இருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. சுதந்திரமடைந்த பின்பு, திரு. டி. எஸ். சேனநாயக்கா பிரதம மந்திரியாகியதும் திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் நடைபெற்றன என அட்டவணையின் அலகுகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

முதன் முதலில் கந்தளாய் குடியேற்றத்திட்டம் இலங்கையில் டி. எஸ். சேனநாயக்காவால் அறிமுகப்படுத்தப்பட்டது: இத்திட்டத்தில் 1320 1960ல் ஆரம்பிக்கப்பட்டு 80 மீனவ குடும்பமும், 1964ல் மட்கோவில் 53 சிங்களக்குடும்பங்களும்குடியேற்றப்பட்டன.

திரியாய் தமிழ்க்கிராமத்தில் கந்தசாமி கோவிலுக்கு அணித்தாக பௌத்த ஆலயம் ஒன்றை நிறுவி 73 குடும்பங்களை 1962ம் ஆண்டு குடியேற்றினார்கள். 1963ல் மிகுந்தபுரம், ஜெயந்திபுரம் என்ற குடியேற்றத்தை ஏற்படுத்தி 40 குடும்பங்களும், ஆண்டான் குளத்தில் 121 சிங்களக்குடும்பங்களும். 1964ல் சீனன்குடாவில் பௌத்த விகாரை கட்டப்பட்டு 41 குடும்பங்களும்

## ஆனையிறவு முகாமிலிருந்து தினமும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தினசரி பகலும், இரவும் ஷெல் தாக்குதல் தொடர்ந்தவண்ணமுள்ளது.

கரந்தாய்க்குளம், புதுக்காட்டுச் சந்தி, இயக்கச்சி, பளை போன்ற பகுதிகளில் இச்ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கின்றன. தினமும் இரவில் 10க்கும் மேற்பட்ட ஷெல்கள் அப்பகுதிகளில் ஏவப்படுகிறது.

முகாமிலிருந்து குடிமக்கள் பெருமளவு வாழும் பகுதிகளை நோக்கியே ஷெல் தாக்குதல் தினமும் இடம்பெறுகிறது. (ஈ)

★ பற்றி எரியும் பாலைவனம்

# அதிபர் புஷ்சை பழிவாங்க அதிபர் ஹுசைன் அழைப்பு

## 5 நாடுகளுடன் ஈராக் உறவு துண்டிப்பு

(பாக்தாத்)

அமெரிக்க அதிபர் திரு. புஷ் தமது நடவடிக்கைக்காக எத்தனை காலம் சென்றாலும் பழிவாங்கப்படுவார். அவரை பழிவாங்குமாறு உலகிலுள்ள முஸ்லிம்களுக்கு ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதிபர் புஷ் பதவி துறந்த பின்னும் அவர் பழிவாங்கப்படுவார். ஈராக்கை ஒரு நூற்றாண்டு காலம் பின்நோக்கி செல்ல வைக்கும் முயற்சியில் பன்னாட்டுப்படைகள் எந்தவித இலக்குமின்றி பொருளாதார, மத, கலாசார நிலைகள் மீதும் அப்பாவிகள் மீதும் குண்டுவீசி அழிக்கின்றன.

ஈராக்கை முற்றாக அழிப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும் இது திட்டமிட்ட படுகொலை நடவடிக்கையாகுமென்றும் அதிபர் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குவைத் மக்கள் அனைவரும் ஈராக்கிய பிரஜைகளாக மாறுமிடின் அவர்களுக்கான சகல உணவுப்பொருள் விநியோகமும் உடனடியாக துண்டிக்கப்படுமென ஈராக் எச்சரித்துள்ளது

### ஈராக் துண்டித்தது

இதற்கிடையில் அமெரிக்கா, பிரிட்டன், சவூதி அரேபியா, எகிப்து, பிரான்ஸ் உடனான சகல ராஜதந்திர உறவுகளையும் ஈராக் துண்டித்துள்ளது: இந்த அறிவிப்பு தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமே சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு ஈராக் அறிவித்தது. ஈராக்கின் இந்த முயற்சி ஏற்றுக் கொள்ளப்படமுடியாததென பிரிட்டிஷ் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### இராசிபலன்

08-02-1991

வெள்ளிக்கிழமை

மேஷம்: வீண்துன்பம் அந்நியர் தொல்லை குடும்ப கஷ்டம்.

இடபம்: வாழ்க்கைச்சுகம், பணவரவு, தொழில்லாபம், பாராட்டு.

மிதுனம்: காரிய சித்தி. தயாளசிந்தை. வேலையாள் சகாயம்.

கடகம்: பணத்தட்டுப்பாடு, தொழில்போட்டி, குடும்ப பிரிவு.

சிங்கம்: ஏமாற்றம். வீண் பழி, கடன் தொல்லை, மனச் சுமை.

கன்னி: அதிகாரம், அவசர முடிவு, பணவரவு. மகிழ்ச்சி.

துலாம்: விபரீத நிகழ்வு, தொழில்பாதிப்பு, கருத்து மோதல்.

விருச்சிகம்: காரியவெற்றி தொழில்சிறப்பு, பெண்உதவி

தனுசு: அதிகயோசனை, தொழில்லாபம் குடும்பசந்தேகம்.

மகரம்: படபடப்பு, குடும்ப பேதல், காரியதடை.

கும்பம்: வேண்டாதஉறவு, தெய்வதரிசனம், பயணங்களால் செலவு.

மீனம்: கண்ணியக்குறைவு, புத்திரர்கவலை, பணமுடை, அசதி.

- ஜோஸ்யர்

### எண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதிக்கான மண்ணெண்ணை விநியோகத்தை கோவளம் இளைஞர் மன்றத்தினர் 'புஸ்பா ட்ரான்ஸ்போட் நிறுவனத்தினரின்' உதவியுடன் கடந்த 5ம் 6ம் திகதிகளில் மேற்கொண்டிருந்தனர்.

பங்கீட்டு அட்டைக்கு அரைபோத்தல்வீதம் கட்டுப்பாட்டு விலையில் கோவளம்கிராமமுன்னேற்றச்சங்க முன்றலில் மண்ணெண்ணை வழங்கப்பட்டது.

# 42 நாட்களின் பின் 2 இளைஞர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மருதானையில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் 42 நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, நெல்லியடி, கரவெட்டி, இராச கிராமம், பிள்ளையார்கோவிலடியைச் சேர்ந்த கே. மகேந்திரன் (22 வயது), எஸ். சிவனேஸ்வரன் [23 வயது] ஆகியோர் 42 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டபின் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

42 நாட்களும் இராணுவத்தினரின் கடும்சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் சரியான முறையில் உணவுகள் வழங்கப்படவில்லை எனவும், நோய்நொடிகளால் துன்பப்பட்டதாகவும் தெரிவித்தனர். (ஈ)

# போதைப்பொருள் தொடர்பானவர்களை இனங்கான உதவுங்கள்’

## - புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
போதைப்பொருள் புழக்கத்திற்கு சிங்கள இனவாத அரசு மறைமுகமாக உதவி வருகின்றது. இந்த நாசகார செயல்களைச் செய்வதற்கு முனைபவர்களையும் எமக்கு இனம் காட்டுவதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்திற்குப் பலம் சேர்ப்போம். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமை செயற் குழு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இன்று உலகெங்குமே போதைப்பொருள் பாவனை ஒரு பெரிய சமூகப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. உலகின் பல நாடுகளில் போதைப் பொருள் கடத்தலுக்கு அல்லது விற்பனைக்கு தண்டனையாக மரண தண்டனைதான் வழங்கப்படுகின்றது. இந்தப் போதைப் பொருட்கள் மனித ஆற்றலை சிதைத்து அவர்களை நடைப்பிணங்களாக்கி விடுகின்றன.

ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாட்டில் இளைஞர்கள்-யுவதிகள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை அடக்குமுறையாளர்கள் திட்டமிட்டே பரப்பிவிடுவார்கள். இதனால் போராடும் ஆற்றல் கொண்ட இளைஞர் பட்டாளம் செயலிழந்து முடங்கிப்போகும் சந்தர்ப்பமுண்டு. இது வெகுவாக உலகு எங்கும் அடக்குமுறை அரசுகளும், ஆக்கிரமிப்புவாதிகளும் கைக்கொள்ளும் ஒரு நயவஞ்சக தந்திரோபாயமாகும்.

இத்தகைய தொரு முயற்சியையே முன்னர் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமும் தமிழீழத்தில் நடைமுறைப்படுத்த முயன்றிருந்தது.

ஆனால் எமது தீவிரமான நடவடிக்கைகள் காரணமாகவும், மக்களின் விழிப்புணர்ச்சி காரணமாகவும் அந்த முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. (வி)

## பஸ் சேவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று யாழ். நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள்.

வட பிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம். பலாலி வீதி, பருத்தித்துறைவீதி, கோவில்வீதி வழியாகபிரதானவீதிக்குச்சென்று நண்பகல் 12 மணிக்கு யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

பஸ்ஊழியர்குடும்பபட்டினிச் சாவை நிறுத்துக 4 மாதச் சம்பளம்வழங்குக பலியான ஊழியர் குடும்பத்துக்கு நிவாரணம் வேண்டும்; மாணவர் நலன் கருதி பஸ் சேவையை ஆரம்பியுங்கள்" என்ற கோஷங்களை ஊர்வலத்தில் கோஷித்தவாறு சென்றனர்.

யாழ் அரச அதிபர் திரு. அர்ரன்அல்பிரட்டிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அம் மகஜரில் ஊழியரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்குமாறும், எரிபொருள், மற்றும் உதிரிபாகங்கள் வழங்கி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும், அந்தந்த மாதங்களில் வேதனங்களை வழங்குமாறும். 1989 அறிமுகப்படுத்தப்பட்ட இடர்காப்புப்படி கிடைக்க உரிய வழிசெய்யுமாறும், 4-மாத சம்பளத்தை உடன் வழங்குமாறும், போக்குவரத்து சம்பந்தமாக மக்கள் [மயப்படுத்தப்பட்ட அரசியல் நடவடிக்கை நிறுத்துமாறும். சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நஷ்டஈட்டை இரட்டிப்பாக வழங்குமாறும் அல்லது அரச ஊழியர்கள் பெறும் ஒய்வூதிய வசதிகளைச் செய்யுமாறும். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்று இரண்டு வருடங்களுக்கு மேலாக வேலை புரிந்து வரும் ஊழியர்களை நிரந்தரமாக்குமாறும். விமானத் தாக்குதல்களை நிறுத்தி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பொருளாளர் திரு பாலசுப்பிரமணியத்திடமும் ஒரு மகஜர் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை, காரைநகர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி பல்போக்குவரத்து ஊழியர்கள் இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றினார்கள். (ஈ) (152-71)

## அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
காப்பு ராஜாங்க அமைச்சர் திரு: ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள்வாழும் பகுதிகளில் எத்தகைய அவதானமும் இன்றி ஸ்ரீலங்கா படையினர் பாரபட்சமானமுறையில் குண்டுவீசித் தாக்குதல் நடத்துவது குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோது இதுகுறித்து கவனம் செலுத்தப்படுமென் றும் அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப் பிரச்சனை குறித்து. இலங்கை அரசு. தொடர்ந்து ராணுவ ரீதியில், உறுதியாக நடவடிக்கை எடுத்துவரும் அதே வேளையில் தமிழ்மக்களின் முக்கிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இனப் பிரச்சனையைத் தீர்க்கமுடியும் என்று அமைச்சர் ரஞ்சன் விளக்கம் அளித்துள்ளார்.

## தமிழீழ மீட்பு

(4ம் பக்கம் பார்க்க)
கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர் தமது பங்களிப்பை பின்வரும் திகதிகளில் செலுத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நல்லூர் உ. அ: அ. பிரிவு 10-02-1991, கரவெட்டி உ. அ. அ. பிரிவு - 16-02-1991, 17-02-1991 பருத்தித்துறை உ. அ. அ. பிரிவு - 18-02-1991

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தத்தமது சிற்றூரவைகளினால் குறிப்பிடப்படும் இடங்களில் ஒதுக்கப்பட்ட நேரத்தில் தமது பங்களிப்பைச் செலுத்திக் கொள்ளலாம் என தமிழீழவிடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கொடிகாமம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குண்டுவீச்சு தாக்குதலைநடாத்தியுள்ளன.

இத்தாக்குதலில் 14 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனின் உடல் சிதறிய நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பலவீடுகளும் சேதமடைந்துள்ளன. (ச)

## மணலாறு இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்தினரையும் விடுதலைப்புலிகள் இடைமறித்து தாக்கியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் இத்தாக்குதலில் புலிகள் தரப்புக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி- 81எல். எம். ஜி. - 1, ரி- 81 எல். எம். ஜி மகஜின்-4, ரி-81-1. ரி 81மகஜின்-4, ரி. 56-3. ரி.56மகஜின்-13, எஸ்.எல். ஆர் -1, எஸ். எல். ஆர். மகஜின் -4, 303 ரைபிள்-4, 303 மகஸின் - 4, ரி. 81 ரைபிள் கிரேனேட் 10, மிதிவெடிகள்-15, 303 ரவைகள் - 223, நேட்டோ ரவைகள்-30, இன்ரமீடியம்715. (வி)

## ஈராக் மீது

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மீதே தாக்குதல் நடாத்தப்படவேண்டுமென்று பிரிட்டனும் ஈராக்கின் சகலநிலைகளையும் தாக்கி அழிக்கவேண்டுமென அமெரிக்காவும் பலத்த கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளன.

மேலும் ஈராக்படையினரின் திறமைகளையும், மனோதைரியத்தையும், ராணுவ யுத்தியையும் பிரிட்டிஷ் படையினர் பாராட்டியுள்ளது அமெரிக்க தளபதிகளிடையே கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

பன்னாட்டு படை தளபதிகளது ஆலோசனைகளை புறக்கணித்து அமெரிக்கபாதுகாப்பு படைதலைமைதளபதியும், பாதுகாப்பு அமைச்சினதும் ஆலோசனைகளையே அமெரிக்கா பெற்றுவருவதும் ஏனையநாட்டு படைகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (சி)

## திரியாயில்

# புலிகள் தாக்குதல்; படையினர் பலி!

(திருமலை)
திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரியாய் இராணுவ முகாம் மீது தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கடும் ஷெல் தாக்குதலைமேற்கொண்டனர்.

இத்தாக்குதலினால் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-க)

# தமிழ்நாட்டில் கைதானோர் அனைவரும் விடுதலை

(சென்னை)
தமிழ்நாடு சட்ட சபையைக் கலைத்தமையை எதிர்த்து நடாத்தப்பட்ட ஹர்த்தாலில் கைது செய்யப்பட்ட 27,000 பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தமிழ்நாடு மாநில ஆளுநரின் செயலர் திரு. கார்த்திகேயன் அறிவித்துள்ளார்.

ஹர்த்தால் அனுஷ்டிப்புச் சம்பந்தமான இதர குற்றச் செயல்களில் ஈடுபட்ட 1282 பேர் குறித்து இதுவரையில் எதுவித முடிவும் செய்யப்படவில்லை. இவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது.

ஹர்த்தால் தினத்தன்று தத்தம் கடமைகளுக்குச் சமுகமளிக்காத சகல அரச ஊழியர்களுக்கும் அத்தினம் விடுமுறையாகக் கணிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நல்லூர், இருபாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வீடுகள் சேதமடைந்தன.

நல்லூர், இராசவீதியைச் சேர்ந்த சி. சின்னத்துரை (72-வயது) என்பவரின் வீட்டின் முற்றத்தில் ஹெலியிலிருந்து வீசப்பட்ட கிரனட்டினால் காயப்பட்டு அவரும் அவருடைய மனைவி இராசம்மா வயது (66) பலத்த காயங்களோடு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள கேணியடி என்னுமிடத்தில் ஹெலியிலிருந்து நடாத்தப்பட்ட கிறனேற் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குமுதினி (10-வயது), கஜேந்திரகுமார் (6-வயது), கீதா ஆகியமூவரும் ச. ரவிசங்கர் (15-வயது) ஆகியோரும் பலத்த காயங்களோடு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

நல்லூர் சட்ட நாதர் கோவிலுக்கு அருகில் ஹெலி நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமுற்றதோடு கோவிலின் ஓடுகள்சேதமடைந்தன.

இச்சம்பவம் சுமார் அரை மணிநேரம் நீடித்தது.

[152-ச]

## மீசாலையில்

(யாழ்ப்பாணம்)
மீசாலை, கொடிகாமம், புத்தூர்ச்சந்தி பகுதிகளில் நேற்று மாலை 4 மணியளவில் ஹெலியொன்று வட்டமிட்டு பலத்த கலிபர் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஹெலியிலிருந்து கிரனேட் வீச்சு, துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. பட்டோர் விபரம் தெரியவரவில்லை. (ஈ)

# அரசுக்கு எதிராக ஊர்வலம் நடத்த மக்கள் அச்சம்

[கொழும்பு]
அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து நடாத்தவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்ள மக்கள் அச்சமடைந்துள்ளதாக 'ஐலன்ட்' தெரிந்துள்ளது.

மனித உரிமை மீறல், விலைவாசி உயர்வை எதிர்த்து இம் மாதம் 21-ம் திகதிபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்த எதிர்க்கட்சிகள் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன.

கடந்த சில வருடங்களில் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் இராணுவத்தினரின் கடுமையான தாக்குதல்களால் கைவிடப்பட்டும், பலர் கொலைப்பட்டதையும் கருத்தில் கொண்டே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள மக்கள் தயங்குவதாகவும் ஐலன்ட் தெரிவித்துள்ளது. (இ

## வீரமரணமடைந்த

(1ம் பக்க தொடர்ச்சி)
றும் வாழைகளும்தோரணமும் கட்டப்பட்டிருந்தன பொதுமக்கள் பெருமளவில் வீதிகளின் இருமருங்கிலும் நின்று தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

வேங்கைகளின் புகழுடம்புகள் கொடிகாமம், கோப்பாய் மாவீரர் மயானங்களில் சகல மரியாதைகளுடனும் தகனம் செய்யப்பட்டன. (வி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.